THE EXAMINATION OF THE WITNESS

(Section 281 Code of Criminal Procedure)

IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | **CC.No. 169/2017** | **PW.2** |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |

STATEMENT OF WITNESS

| | | |
|---|---|---|
| Name | : திருமதி. சண்முகதாய் | |
| Husband Name | :திரு. சுடலைகண்ணு | |
| Village | : தண்டையார்குளம் | |
| Taluk | :இராதாபுரம் | |
| Employment | : இல்லத்தரசி | |
| Age | :54 | Date:16.10.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(Accused absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed)**

<u>முதல் விசாரணை</u> :–

1. நான் தண்டையார்குளத்தில் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். வழக்கின் 3 வது எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது மகளின் மாமியார். அ..சா.1 எனது மகள். 1,2 எதிரிகள் தற்போது இறந்து விட்டார்கள். எனது மகளுக்கும் 1 வது எதிரிக்கும் கடந்த 2007 ம் வருடம் திருச்செந்தூரில் வைத்து திருமணம் நடந்தது.

2) எனது மகளுக்கு திருமணத்தின் போது 40 பவுன் தங்க நகை மற்றும் ரொக்கம் ரூ. 2 லட்சம் கொடுத்தோம். எனது மகள் திருமணத்திற்கு பிறகு 1 வது எதிரியுடன் சென்னையில் வசித்து வந்தார். அப்போது 2,3 எதிரிகளும் அவர்களுடன் வசித்து வந்தார்கள். எனது மகளுக்கு திருமணத்தின் பயனாக இரண்டு மகன்கள் பிறந்தார்கள். 1 வது எதிரி இன்னொரு பெண்ணை திருமணம் செய்து கொண்டதால் எனது மகளுக்கும் 1 வது எதிரிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டதால் எனது மகள் இரண்டாவது மகனை அழைத்து கொண்டு எங்கள் வீட்டிற்கு வந்தார்.

3) 1 வது எதிரி 2 வது திருமணம் செய்து கொண்டதை தெரிந்து எனது மகள் வள்ளியூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>3 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர் தரப்பில் மற்றொரு வழக்கறிஞர் முன்னிலையாகி மதியம் 3.00 மணிக்கு 3 ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் வருவதாக தெரிவித்தார். சாட்சி 3.30 மணி வரை நீதிமன்றத்தில் காத்திருந்தும் 3 ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் வரவில்லை. எனவே சாட்சியம் முடிக்கப்படுகிறது.

Taken down me in open court in the presence of the accused read over to the deponent and admitted by him/her to be correct.

Sd/-P. Moses Jebasingh,
Judicial Magistrate,
Valliyoor.